| Headline | Mesra Rakyat Project goes out in a big way to fix homes for the | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 16 Aug 2016 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 13 |
| ArticleSize | 145 cm² | Journalist | N/A |
| PR Value | RM 1,476 | | |
| | | | |



# தெனாகா நேஷனலின் 'மெஸ்ரா ராக்யாட்' திட்டத்தின் கீழ் சரஸ்வதியின் வீடு மறுசீரமைக்கப்பட்டது

**தி.செல்வி**

கோலாலம்பூர், ஆக.16-

சமூகப் பொறுப்பு என்பது அனைவருக்கும் இருக்க வேண்டியது அவசியம். தெனாகா நேஷனல் நிறுவன சமூக பொறுப்புடைமைத் திட்டத்தின் ஓர் அங்கமான 'மெஸ்ரா ராக்யாட்' திட்டத்தின் கீழ் கம்போங் பாண்டானில் வசித்து வரும் சரஸ்வதி சுப்பையாவின் வீட்டை மறுசீரமைப்பு செய்து தந்துள்ளது. கடந்த 2012ஆம் ஆண்டு தெனாகா நேஷனல் தொடங்கிய இத்திட்டத்தின் வழி பல இந்தியர்கள் பயனடைந்து இருக்கின்றனர். பேறு குறைந்த, தனித்து வாழும் தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், ஏழைக் குடும்பத்தினர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையில் தெனாகா நேஷனல் இந்த நற்காரியத்தை செய்து வருகிறது.

இது வரையில் இத்திட்டத்தின் கீழ் 72 சீன, இந்திய குடும்பங்களின் வீடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மட்டும் இத்திட்டத்தின் வாயிலாக 24 வீடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாண்டு கூட்டரசுப் பிரதேசத்தில் கோல அம்பாங்கில் அமைந்துள்ள சீயோங் சுவீ சாங்கின் வீடும், கம்போங் பாண்டானில் இருக்கும் சரஸ்வதி வீடும் அடையாளம் காணப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட உதவிகள் தெனாகா நேஷனலால் வழங்கப்பட்டது.

'மெஸ்ரா ராக்யாட்' திட்டத்தின் மூலமாக இந்த இரு குடும்பங்களுக்கும் தலா 30,000 வெள்ளி செலவில் வீடு மறுசீரமைககப்பட்டு தரப்பட்டுள்ளது.

தெனாகா நேஷனல் கூட்டரசுப் பிரதேச பயனீட்டாளர் விவகாரப் பிரிவுத் தலைவர் பொறியியலாளர் அகமட் பரோடி திருமதி சரஸ்வதிக்கு மறுசீரமைக்கப்பட்ட வீட்டின் சாவியை வழங்கினார். வறுமையில் வாடிய தனக்கு இந்த வீட்டை மறுசீரமைத்துக் கொடுத்த தெனாகா நேஷனலுக்கும் அதற்கு ஆணிவேராக இருந்த கம்போங் பாண்டான் கிளை மஇகா தலைவரும் கம்போங் பாண்டான் ஒரே மலேசியா இந்திய சமூக நல அமைப்பின் தலைவருமான ஸ்ரீதரன் பொன்னம்பலத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக சரஸ்வதி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தித்திவங்சா தொகுதி மஇகா தலைவர் ஆர்.டி.சுந்தரம், தித்திவங்சா தொகுதி நாடாளு மன்ற உறுப்பினரும் இரண்டாம் நிதித்துறை துணைய மைச்சரின் சிறப்பு அதிகாரியான முகமட் நோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Powered by: iSENTIA